**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**I.A. No.2 of 2025 in O.S. No.145 of 2025**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.03.2026 | | |
| பெயர்: | முகிலன் (RW1- Cross ) | தகப்பனார் பெயர்: | செல்வராஜ் |
| கிராமம்: | சின்னப்பெருந்தோட்டம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | VAO, தென்னாம்பட்டினம் | வயது : | 34/2026 |

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : 23.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.15)**

1. மனுதாரர் சீதாலெட்சுமிக்கு வடக்குவெளி, தென்னாம்பட்டினத்தில் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சீதாலெட்சுமி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சீதாலெட்சுமிக்கு சொந்தமான சர்வே எண்.202/4ஏ9 –ல் பாசனகண்ணி இருக்கிறதா என்றால் இருக்கிறது. அதற்கான வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். ஆனால், அதில் பாசனகண்ணி குறிப்பிடவில்லை. உண்மையில், பாசனகண்ணி அந்த இடத்தில் இருந்திருந்தால் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு இல்லாததால் தான் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. ஆனால், நேரில் பார்த்தால் பாசனகண்ணி தெரியும். நான் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. மனுதாரர் சீதாலெட்சுமி பெயரில் உள்ள வேறு சொத்துக்கள் சம்பந்தமான பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்கள்.194/1பி2, 194/5டி2 அதற்கான பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு புல எண்கள்.194/1பி2, 194/5டி2 உடைய

சொத்துக்களானது அவரது தகப்பனார் மூலமாக செட்டில்மென்ட் ஆவணமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். இந்நாள் வரையில், மனுதாரர் சீதாலெட்சுமி பெயரில் புல எண்கள்.194/1பி2, 194/5டி2 உடைய பட்டா மாறவில்லை என்றால் சரியல்ல. அவருடைய பெயரில் மாறிவிட்டது. ஆனால், ஆன்லைனில் மனுதாரர் பெயருக்கு எந்தவித பட்டாவும் மாறவில்லை என்றால் சரியல்ல. புல எண்கள்.194/1பி2, 194/5டி2 சொத்துக்களில் பாசனகண்ணி உள்ளதா என்றால் இல்லை.

3. பாசனகண்ணி சம்பந்தமாக அமைதி கூட்டம் நடந்ததா என்றால் இல்லை. நான் பணியில் சேர்ந்து குறுகிய காலமே ஆனதால் மேற்படி சொத்து சம்பந்தமாக விசாரணைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நேரில் சென்று விசாரித்தேன். தென்னாம்பட்டினம் ஊராட்சிக்குட்பட்ட வடக்குவெளியில் சுமார் 10க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. அதில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். அந்த பாசன வாய்க்கால் மூலமாக சுமார் 15 பேர் பலனடைவார்கள். மேற்படி வாய்க்காலை பயன்படுத்தி விவசாயம் செய்யலாம் என்றால் சரிதான். பாசனகண்ணி மற்றும் குளத்தை நம்பி விவசாயம் செய்வார்களா என்றால் சரிதான். நான் வழக்கிற்காக மனுதாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.31)**